00077

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 2019
**ESD 1133/EPD3233**– கலைத்திட்டக் கற்கையும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடும்
இறுதிப்பரீட்சை - மட்டம் 03
03 மணித்தியாலங்கள்

---

காலம் : மு.ப 2.00 – பி.ப 4.00 திகதி : 02.03.2019

---

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி I

01 *'சுற்றாடல்'* என்னும் பதத்தினை உமது சொந்த மொழிநடையில் வரையறுக்க.

02 *"சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்"* என்னும் பாடமானது மற்றைய ஆரம்பக் கல்விப் பாடங்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

03. 1972 ஆம் ஆண்டு கலைத்திட்ட மறுசீரமைப்பில் 'சுற்றாடல் கல்வி' எனும் பாடம் அறிமுகம் செய்யப்பட்டதன் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக.

04. *"சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்"* என்னும் பாடம் தொடர்பாக களப்பயணத்தின் முக்கியத்துவத்தினை பகுப்பாய்வு செய்க

05 ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்கள் ஆராய்தலினூடாக எவ்வாறு சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடத்தினைக் கற்கின்றனர் என விளக்குக.

06 ஆரம்ப வகுப்பறைகளில், ஆசிரியர் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் தொடர்பாக மாணவரை எவ்வாறு கணிப்பீடு செய்யலாம் என்பதனை சுருக்கமாக விளக்குக.

07. *"சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடத்தினூடாக மாணவர்களுக்கு அதிக அறிவினைப் புகட்டுவது நோக்கமல்ல"*

இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடைக்கான காரணங்களைத் தருக?

08 *'ஆசிரியர் ஒரு துணை புரிபவர்'* என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

(8X5= 40 புள்ளிகள்

## பகுதி II

09. அ. பின்வரும் பதங்களைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

i. உணவுச் சங்கிலி
ii. உணவு வலை
iii. உற்பத்தியாக்கி
iv. முதலாம்படி நுகரி
v. இரண்டாம்படி நுகரி
vi. மூன்றாம்படி நுகரி

(6 புள்ளிகள்)

ஆ. மூன்று பிரதான வகை உணவுச் சங்கிலிகளைப் பெயரிட்டு அவற்றினை சுருக்கமாக விளக்குக.

இ. (i) பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக உணவுச் சங்கிலி ஒன்றை உருவாக்குக.

| |
|---|
| பறவை, நாகபாம்பு, பசு, புலி,கழுகு, வெட்டுக்கிளி, மனிதன், எலி, கீரி, நெல், முயல் |

(4 புள்ளிகள்)

(ii) உம்மால் அமைக்கப்பட்ட உணவு வலையில் இருந்து மூன்று உணவுச் சங்கிலிகளை இனங்காணுக.

(iii) உமது உணவுச் சங்கிலிகளை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க

| உணவுச் சங்கிலி | உற்பத்தியாக்கி | முதலாம்படி நுகரி | இரண்டாம்படி நுகரி | மூன்றாம்படி நுகரி |
|---|---|---|---|---|
| உணவுச் சங்கிலி 1 | | | | |
| உணவுச் சங்கிலி 2 | | | | |
| உணவுச் சங்கிலி 3 | | | | |

(3 புள்ளிகள்)

10. அ. "*சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்*" என்னும் பாடத்தினைக் கற்பதற்குப் பயன்படுத்தக் கூடிய இரண்டு கற்றல்- கற்பித்தல் செயலொழுங்குகளைக் குறிப்பிடுக.

ஆ. மேலே நீங்கள் குறிப்பிட்ட கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகளில் ஏதாவது ஒன்றினைத் தெரிவுசெய்து பின்வருவனவற்றை விளக்குக.

(i) இந்த முறையின் முக்கியத்துவம்

(ii) இந்த முறையின் பலம் மற்றும் பலவீனம்

(16 புள்ளிகள்)

11. அ. சுற்றாடலைப் பற்றிய மூன்று (3) தத்துவார்த்தப் பார்வைகளை சுருக்கமாக விபரிக்குக.

(08 புள்ளிகள்)

ஆ. மேலே நீங்கள் குறிப்பிட்ட தத்துவார்த்தப் பார்வைகளின் பொருத்தப்பாட்டினை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

12. அ. "*சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்*" என்னும் பாடம் தொடர்பாக தொடர்பாடல் திறன்கள் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

ஆ. மாணவரின் தொடர்பாடல் தேர்ச்சிகளை விருத்தி செய்யப் பயன்படக்கூடிய ஐந்து செயற்பாடுகளைப் பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

இ. மேலே பகுதி ஆ/ இல் நீங்கள் குறிப்பிட்ட செயற்பாடுகளில ஏதாவது ஒன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

13. "*சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்*" என்னும் பாடத்தனைக் கற்பிப்பதற்கு பின்வரும் முறைகளின் பயன்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

(i). கண்டுபிடித்தல் முறை

(ii). பிரசினம் தீர்த்தல் முறை

(iii). பாத்திரமேற்று நடித்தல்

(iv). செயற்றிட்ட முறை

(5x4 =20புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*